

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக 20.06.2025 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூரில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, கல்லூரியில் நடைபெற்ற விழாவில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு கலந்து கொண்டு கல்லூரி வளாகத்தை பார்வையிட்டு சேர்க்கை அனுமதியை மாணாக்கர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், முசிறி சட்டமன்ற உறுப்பினர் ந.தியாகராஜன், துறையூர் சட்டமன்ற உறுப்பினர் செ.ஸ்டாலின் குமார், மண்ணச்சநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சீ.கதிரவன், மாநகராட்சி மேயர் அன்பழகன், கல்லூரி கல்வி இணை இயக்குநர் பி.பொன்முத்துராமலிங்கம், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கங்காதாரிணி, திருச்சி முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் தர்மன் ராஜேந்திரன் அறங்காவல் குழு தலைவர் , நகர செயலாளர் மெடிக்கல் முரளி, ஒன்றிய செயலாளர்கள் ராமச்சந்திரன், அண்ணாதுரை முத்துச்செல்வம் வீரபத்திரன் அரசுத்துறை அலுவலர்கள், மக்கள் பிரதிநிதிகள் கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### இந்தியாவிலேயே

# தமிழ்நாடு உயர் கல்வியில் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது!

## அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பெருமிதம்!

சென்னை, ஜூன் 25-

இந்தியாவிலேயே தமிழ்நாடு உயர் கல்வியில் முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்று சென்னை குருநானக் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி உரையாற்றுகையில் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் சென்னை, குருநானக் கல்லூரியில் நடைபெற்ற 49-வது பட்டமளிப்பு விழாவில் மாணாக்



கர்களுக்கு பட்டங்களை வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் பேசியதாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழிதடத்தில் அனைவருக்குமான சமூக நீதி ஆட்சியை சிறப்பாக செயல்படுத்தி வரும் நமது முதலமைச்சர் அவர்களின் நான் முதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள ஏழை, எளிய, கிராமப்புற மாணவர்கள் உயர்கல்வியில் சிறந்து விளங்குகிறார்கள். தமிழ்நாடு இந்தியாவிலேயே உயர்கல்வியில் முதன்மை மாநிலமாக அனைவருக்கும் முன்னுதாரணமாக திகழ்கிறது.

**கலைஞரால் தொடங்கப்பட்ட கல்லூரி!**

சீக்கிய சமயத்தை தோற்றுவித்த குருநானக் அவர்களின் ஐநூறாவது பிறந்த நாளை முன்னிட்டு, குருநானக் கல்லூரி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1971இல் தொடங்கப்பட்டது. 2021-2022-இல் பொன்விழா கண்டது. உயர்கல்வியை வழங்கி வரும் திறன்மிகு கல்வி நிறுவனங்களில் முன்னோடியாகச் தலைநகர் சென்னைக்கு பெருமை சேர்க்கும் வகையில் இக்கல்லூரி செயல்பட்டு வருகிறது. அது மட்டுமில்லாமல் கல்லூரியில் அமைந்துள்ள "லங்கர்" (சமபந்தி) எனப்படும் பொதுசமையற்கூடம் வாயிலாக தினசரி 500 மாணவர்களுக்கு தினமும் மதிய உணவு இலவசமாக அளிக்கப்படுவது பெருமைக்குரியதாகும்.

இக்கல்லூரியில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 7,024 மாணவர்கள் திறன் பயிற்சி பெற்றுள்ளனர். முதல் தலைமுறை பட்டதாரிகள் 2,724 பேர், BC/MBC மாணாக்கர்கள் 718 பேர், SC/ST மாணாக்கர்கள் 846 பேர் கல்வி உதவித்தொகை பெற்றுள்ளனர். புதுமைப்பெண் திட்டத்தில் 275 மாணாக்கர்களும் பயன்பெற்றுள்ளனர். தமிழ்ப்புதல்வன் திட்டத்தில் 247 மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். ஆகமொத்தம் 2,086 மாணவர்கள் தமிழ்நாடு அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெற்று வருவது மிகுந்த மகிழ்ச்சிக்குரியதாகும்.

ஒரு சாரார்களுக்கு மட்டுமே உடைமையாக இருந்த கல்வியை நீதிக் கட்சியும், திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் கடுமையாகப் போராடிப் பெற்ற சமூகநீதி சார்ந்த 'இட ஒதுக்கீடு' கோட்பாட்டின் வெற்றிதான் இது. இன்றைய தலைமுறையினர் இவற்றை நன்றாக அறிந்து கொள்ள வேண்டும். இது பற்றிய விழிப்புணர்வை இன்றைய இளைய தலைமுறையினர் பெறவில்லை என்றால், பல்லாண்டுகள் நாம் போராடிப் பெற்ற வெற்றியைத் தமிழினப் பகைவர்கள் இளங்கலை படிப்பிற்கே கியூட் என்ற நுழைவுத் தேர்வுகள் மூலம் பறித்துக் கொண்டு விடுவர்.

பொறியியல் கல்விக்கு நுழைவுத் தேர்வு இருந்த காலத்தில் கிராமப்புற மாணவர்கள் 25 ஆயிரம் பேர் சேர்க்கை பெற்றனர். ஆனால், நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்பட்ட பின்னர் கிராமப்புற மாணவர்கள் 77 ஆயிரம் பேராக சேர்க்கை அதிகரித்ததை மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

**பொது நுழைவுத் தேர்வு சாத்தியமற்றது!**

CUET நுழைவுத் தேர்வை மட்டுமே வைத்து மாணவர்கள் தரத்தை முடிவு செய்வது என்பது முற்றிலும் நயவஞ்சகமானது. இந்தியா முழுவதும் ஒரே பாடத்திட்டம் இல்லாதபோது இந்தியாவிற்கான பொது நுழைவுத் தேர்வு என்பது சாத்தியமற்றது. நுழைவுத் தேர்வு பயிற்சி மையங்கள் வணிக ரீதியாகவே செயல்பட்டு, மாணவர்களிடம் பணத்தை பறிப்பதற்காகவே உள்ளன. புதிய கல்விக் கொள்கை மண்பாண்டம் செய்தல், தச்சு வேலை செய்தல் போன்ற குலத் தொழில்களை கற்பிப்பதில் அதிக கவனம் செலுத்துகிறது.

இந்தி, சமஸ்கிருதத்தை உள்ளடக்கிய மூன்மொழிக் கொள்கையே புதிய கல்விக் கொள்கை. தமிழக அரசின் இரு மொழிக் கொள்கைக்கு முரணானது. தற்போதுள்ள 10+2+3 என்ற நடைமுறை, மாணவர்கள் எளிதாக பட்டப் படிப்புக்குச் செல்லும் முறை. இந்த கல்வி முறையை மாற்றக் கூடாதென்பதே தமிழ்நாட்டின் நிலைப்பாடாகும். இதை எதிர்ப்பதில் இந்தியாவிலேயே இன்று தமிழ்நாடு மட்டும்தான் முன்னணியில் நிற்கிறது.

நமது முதலமைச்சர் தன்னிகரில்லாத தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உயர்கல்வியில் ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல்களுக்குச் சிறிதும் அஞ்சாமல், போராடி வருகிறார். மாணவர்கள் அரசின் "நான் முதல்வன்" போன்ற இத்திட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். 'நான் முதல்வன்' திட்டம் எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையைத் தரும். அதைத்தான் நம் முதல்வர் மாணவர்களிடம் விதைத்திட அறிவுறுத்தியுள்ளார்.

இன்று குருநானக் கல்லூரியில் நடைபெறும் 49-வது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். சிறப்புமிக்க இக் கல்வி நிறுவனத்தில் 7024 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். இன்று நடைபெறும் விழாவில் 36 மாணாக்கர்களுக்கு பதக்கதுடன் பட்டமும், 610 மாணாக்கர்களுக்கு பட்டமும் வழங்கப்பட உள்ளது.

நீங்கள் இதுவரை ஒரு மாணவர் என்ற நிலையில் படிக்கும் இடம் சார்ந்தும் உங்களின் பெற்றோரைச் சார்ந்தும் நீங்கள் இருந்திருப்பீர்கள். ஆனால் இன்று முதல் உங்கள் ஒவ்வொருவரையும் தனித்தனி மனிதராக இந்தச் சமூகம் பார்க்கப்போகின்றது. இந்தச் சமுதாயத்தில் எந்த உயரத்தை எட்ட வேண்டுமோ அதை உங்களின் செயல்களால் நீங்கள் பெற்றுக் கொள்கிற நேரம் வந்துவிட்டது. அதற்கான அடையாளம்தான் இன்று நீங்கள் பெறும் பட்டம்.

நீங்கள் படித்த படிப்பை சரியான சமயத்தில், சரியான முறையில் பயன்படுத்துவதில்தான் உங்கள் வெற்றியும் எதிர்கால இந்தியாவின் வெற்றியும் மனித குலத்தின் வெற்றியும் அமைந்திருக்கின்றது. இன்று நீங்கள் பெறும் பட்டம் உங்கள் வாழ்வில் புதிய வெற்றிகளை முழக்கட்டும். எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையோடு பயணம் செய்யுங்கள். நிறைந்த புகழையும், வெற்றிகளையும், மகிழ்ச்சியையும் நீங்கள் பெற வேண்டுமென்று மனதார வாழ்த்துகிறேன்.

இவ்வாறு, உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி தாளாளர் மற்றும் பொதுச் செயலாளர் மன்ஜித் சிங் நய்யர், கல்லூரி முதல்வர் முனைவர் இரா. மா. எழிலரசி, பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள், மாணாக்கர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

### பா.ஜ.க.வுடன் கைகோர்த்து

# எடப்பாடி பழனிசாமி பா.ஜ.க.வின் பிரதிநிதியாகவே செயல்படுகிறார்!

## அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா கண்டனம்!

சென்னை, ஜூன் 25-

பா.ஜ.க.வுடன் கைகோர்த்து எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி பா.ஜ.க.வின் பிரதிநிதியாகவே செயல்படுகிறார் என்று அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா வெளியிட்டுள்ள விரிவான விளக்க அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அ.தி.மு.க. ஐ.டி.விங் சரியாக செயல்படாததால் அந்த வேலையையும் செய்ய முயற்சிக்கிறார் எதிர்க் கட்சித் தலைவர் அவதூறுகளுக்கு பதிலடி கொடுத்து அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா விரிவான விளக்க அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டின் மீது அக்கறையுள்ள எந்தவொரு மனிதராக இருந்தாலும், மாநிலத்திற்கு நல்லது நடந்தால் அதைப் பார்த்து பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறார்கள். தமிழ்நாட்டின் நலன் மீது துளியும் அக்கறையில்லாத தமிழ் விரோதிகள்தான், மாநிலத்தின் சாதனைகளை பாராட்ட மனமின்றியும், அவற்றைக் கண்டு மனம் வெதும்பியும், ஏதாவது களங்கம் கற்பிக்க முடியுமா என்று சிந்தித்து, அவதூறுகளைப் பரப்புகிறார்கள். துரதிர்ஷ்டவசமாக, எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அவர்களும் கடந்த சில வருடங்களாக அப்படிப்பட்ட தமிழ்நாட்டின் நலனுக்கு எதிராக நிற்கிறார். அவர் அரசியல் கூட்டாளியான பா.ஜ.க.வுடன் கைகோர்த்துக்கொண்டு, பா.ஜ.க.வின் பிரதிநிதியாகவே செயல்படுகிறார்.

**தமிழ்நாட்டை புறக்கணிக்கும் பா.ஜ.க.**

கீழடி ஆய்வறிக்கையை ஏற்க மறுக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் செயல்பாடுகளையும், தமிழ்நாட்டைப் புறக்கணிக்கும் பா.ஜ.க.வின் தமிழர் விரோதப் போக்கிற்காகவும்தான் எடப்பாடி பழனிசாமி அவர்கள் கோபமடைய வேண்டும், முருகன் பெயரில் பா.ஜ.க. நடத்திய அரசியல் கூட்டத்தில் தந்தை பெரியாரையும் பேரறிஞர் அண்ணாவையும் கொச்சைப்படுத்தும் காணொளியைப் பார்த்து அமைதியாக உட்கார்ந்திருந்த தன் கட்சி நிர்வாகிகள் மீது அவருக்கு கோபம் வரவில்லை. இன்னமும் அவரது கட்சி அண்ணாவின் பெயரில்தான் இயங்குகிறதா இல்லையா? தமிழ்நாடு பெரியார் மண்-அண்ணா மண் என்பதை அவர் ஒப்புக்கொள்கிறாரா அல்லது இங்கேயும் காவிக் கூட்டத்தின் அராஜக செயல் தாண்டவமாட வேண்டும் என்று எதிர்பார்க்கிறாரா? பெரியாரையும் அண்ணாவையும் கொச்சைப் படுத்துபவர்களை வேடிக்கை பார்க்கும் இவர்களை அவர்களின் கட்சித் தொண்டர்களே மன்னிக்க மாட்டார்கள்.

சமீபத்தில், தி.மு.க.வின் ஐ.டி.விங், பா.ஜ.க.வின் துரோக முகத்தையும், நமது தமிழர்களின் பெருமைமிக்க பண்பாட்டுக் கருவூலமான கீழடி விவகாரத்திலும், மேலும் பலவற்றிலும் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அவர்களின் தமிழ் விரோத நிலைப்பாட்டையும் அம்பலப்படுத்தி, தக்க பதிலடி கொடுத்தது.

தி.மு.க. ஐ.டி. விங்கின் பாய்ச்சலையும், அ.தி.மு.க. ஐ.டி.விங்கின் படுதோல்வியையும் எதிர்க் கட்சித் தலைவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை, ஆகையால், அ.தி.மு.க. ஐ.டி.விங்கின் அவதூறு பரப்பும் வேலையையும் அவரே கையில் எடுத்துக் கொண்டுள்ளார். முதலமைச்சரின் தலைமையிலான அரசின் தொழில்துறை வளர்ச்சியைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், உண்மைக்கு புறம்பான செய்திகளை பரப்பி வருகிறார்.

ஏறக்குறைய ஒரு வருடத்திற்கு முன்பு, ஆகஸ்ட் 2024-ல், அவர் அந்நிய நேரடி முதலீடு (FDI) எண்களைக் குறிப்பிட்டு, தமிழ்நாட்டின் சாதனைகளைக் குறைத்து மதிப்பிடும் ஒரு அறிக்கையை வெளியிட்டார். அப்போதே நானும் அவருக்கும், அவரது கற்பனைத் திறனற்ற அடிமைப் படைக்கும் அந்நிய நேரடி முதலீட்டுத் தரவு தமிழ்நாட்டின் செயல்திறனை அளவிடுவதற்கான சரியான தரவு அல்ல என்று விளக்கமளித்திருந்தேன்.

இப்போதாவது இந்த எளிய உண்மையை புரிந்துகொள்வார் என்ற நம்பிக்கையில் மீண்டும் கூறுகிறேன், இந்தியாவில் ஒரு குறிப்பிட்ட மாநிலத்தில் முதலீடு செய்யும் நிறுவனங்களின் பதிவு செய்யப்பட்ட தலைமையகங்கள் பிற மாநிலங்களில் உள்ளன. மேலும், அந்த நிதி, அவற்றின் தலைமையகங்கள் அமைந்துள்ள மாநிலத்தின் கணக்கில் வரவு வைக்கப்படும். உற்பத்தி மாநிலமான தமிழ்நாட்டை பல நிறுவனங்கள் முதலீடு செய்யவோ அல்லதுமறுமுதலீடுசெய்யவோ தேர்வு செய்திருந்தாலும், அவற்றின் பதிவு செய்யப்பட்ட தலை



மையகங்கள் வேறு மாநிலங்களில் உள்ளன. அந்நிய நேரடி முதலீடுகளைக் கணக்கிடுவதில் பல சிக்கல்கள் எப்போதுமே இருந்து வருகின்றன. எனவேதான் பொருளாதார நிபுணர்கள் அதை மாநிலத்தின் வளர்ச்சிக்கான சரியான குறியீடாக ஏற்றுக்கொள்வதில்லை. இத்தகைய நிலையிலும், தமிழ்நாடு இந்தியாவின் முதலீட்டில் தொடர்ந்து முதன்மை மாநிலமாக உள்ளதுடன், தொடர்ச்சியான வளர்ச்சியையும் கண்டு வருகிறது.

முதலமைச்சர் கூறியது போல, நமது நியாயமான முதலீடுகளைப் பிற மாநிலங்களுக்குத் திசை திருப்புவதில், குறிப்பாக பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கு கொண்டு செல்வதில் ஒன்றிய அரசு மிகத் தீவிரமாக இருக்கிறது. அதற்காக தன் அதிகார பலத்தைப் பயன்படுத்துகிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தன் கண்டன அறிக்கையை ஒன்றிய அரசை நோக்கி வெளியிடுவதே சரியானதாக இருக்கும்.

**ரூ.10 லட்சம் கோடிக்கும் அதிகமான முதலீடுகள்!**

அ.தி.மு..க.வின் 2016-2021 காலகட்டத்தில் 2 லட்சம் கோடி முதலீட்டு உறுதிமொழிகளைப் பெற்றதாக அவர் கூறுகிறார். திராவிட மாடல் அரசு தனது ஆட்சிக்காலமான இந்த 4 ஆண்டுகளில், 10 லட்சம் கோடிக்கும் அதிகமான முதலீடுகளையும், 31 லட்சத்திற்கும் அதிகமான வேலைவாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளது. அவரது கூற்றுப்படியே 2 இலட்சம் கோடி ரூபாய்க்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டதை ஒப்புக்கொண்டாலும், எத்தனை சதவீதம் முதலீடாக மாறியது என்பதை அவர் குறிப்பிடவில்லை. அவர் முதலீடாக மாற்றாமல் விட்டுச் சென்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும், காழ்ப்புணர்வு காட்டாமல், தமிழ்நாட்டின் தொழில்வளர்ச்சிக்கான முதலீடுகளாக மாற்றுவதற்கு தொடர்ந்து முயற்சித்து செயல்படுத்தி வருகிறது திராவிட நாயகன் அவர்களின் தலைமையிலான அரசு.

கடந்த நிதியாண்டில் 9.69% GSDP வளர்ச்சியுடன் இந்தியாவில் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு உள்ளது. நாட்டின் மக்கள் தொகையில் 6%க்கும் குறைவாக இருந்தும், இந்தியாவின் உற்பத்தி GDP-யில் 11.9% பங்களிக்கிறோம். இந்த மக்கள் தொகையைத்தான் பா.ஜ.க. அரசு நாடாளுமன்றத்தில் நியாயமற்ற மறுவரையறை மூலம் குறைவாகப் பிரதிநிதித்துவப் படுத்த விரும்புகிறது. ஆனாலும், தனது அரசியல் எஜமானர்கள் தமிழ்நாட்டுக்கு இழைக்கும் அநீதிகள் குறித்து எதுவும் பேசாமல் எதிர்க்கட்சித் தலைவர் அமைதியாக இருக்கிறார்.

முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் எலக்ட்ரானிக்ஸ், ஆட்டோமொபைல், EV, ஜவுளி, தோல் மற்றும் காலணி வரை அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணியில் உள்ளது. 2021-22-ல், எலக்ட்ரானிக்ஸ் ஏற்றுமதியில் நாம் வெறும் 1.66 பில்லியன் அமெரிக்க டாலர்கள் என்ற அளவில் இருந்தோம். ஆனால், கடந்த ஆண்டு 14.6 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டினோம் - வெறும் 4 ஆண்டுகளில் 9 மடங்கு வளர்ச்சி!

இந்திய நாட்டின் ஜவுளி ஏற்றுமதியில் 21.8 விழுக்காடுடன் தமிழ்நாடு முதலிடம் பிடித்துள்ளது. தோல் மற்றும் காலணி ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்கு 38 விழுக்காடு ஆகும். இந்தப் பொருட்களை இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் இந்த அளவுக்கு ஏற்றுமதி செய்வதில்லை.

மேலும், தென் தமிழ்நாடு ஒரு முக்கிய பசுமை ஆற்றல் மற்றும் ஆட்டோ மையமாக உருவெடுத்து, சிங்கப்பூர் மற்றும் வியட்நாம் ஜாம்பவான்களான, விரைவில் திறக்கப்படவிருக்கும் VINFAST உள்ளிட்ட நிறுவனங்களிடமிருந்து தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலியில் பெரும் முதலீடுகள் குவிந்து, பரவலாக்கப்பட்ட வளர்ச்சியை நாம் அடைந்து வருகிறோம்.

தமிழ்நாடு முழுவதும் TIDEL NEO பூங்காக்களைக் கட்டி வருகிறோம். இதில் பல ஏற்கனவே செயல்படத் தொடங்கிவிட்டன.

அ.தி.மு.க. ஆட்சியில் இருந்த 10 ஆண்டுகாலத்தில் அவர்கள் வெறும் 6-7 SIPCOT பூங்காக்களை மட்டுமே நிறுவினர். இந்த அரசாங்கத்தின் கீழ், நாம் 30-க்கும் மேற்பட்ட பூங்காக்களை நிறுவியுள்ளோம், மேலும் பலவற்றை நிறுவும் பணியில் இருக்கிறோம்.

**கோவை விமான நிலையம் விரிவாக்கம்!**

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே.. கோயம்புத்தூர் விமான நிலையத்தை விரிவாக்க நீங்கள் 10 ஆண்டுகளாகத் தூங்கினீர்கள் - ஆனால் கோயம்புத்தூருக்குத் தகுதியான விமான நிலையத்தை அளிக்க நமது முதலமைச்சர் தான் 2000 கோடிக்கும் அதிகமான தொகையை ஒதுக்கினார். உங்கள் எஜமானரான பா.ஜ.க.வைச் சேர்ந்த எம்.எல்.ஏ. வான திருமதி. வானதி சீனிவாசன் கூட நமது முதலமைச்சருக்கு நன்றி தெரிவிக்கும் அளவிற்குப் பெருந்தன்மை காட்டினார். ஆனால், மேற்கு தமிழகத்தைச் சேர்ந்த நீங்கள் நன்றியுணர்வுடன் அதைப் பாராட்டக்கூட வேண்டாம். காழ்ப்புணர்ச்சியால் , அவதூறு அறிக்கைகளை வெளியிடுவதை நிறுத்துங்கள்.

சென்னை மெட்ரோ இரண்டாம் கட்டத் திட்டத்திற்கு அக்டோபர் 2024-ல் மட்டுமே அமைச்சரவையால் இறுதி ஒப்புதல் கிடைத்தது, மேலும் அதன் நிறைவுக்கான இலக்கு 2028 ஆகும். ஒன்றிய அரசு இந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்காதது குறித்து நீங்கள் ஒரு கேள்வியாவது கேட்டிருக்கிறீர்களா?

முதலமைச்சர் அவர்கள் ஓசூர் மற்றும் ராமேஸ்வரத்தில் பெரிய விமான நிலையங்களை அறிவித்துள்ளார். இது அந்த பகுதிகளில் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கி, அவற்றை மிகப்பெரிய முதலீட்டு மையங்களாக மாற்றும். தஞ்சாவூரில் முதல் SIPCOT, தென்காசியில் முதல் SIPCOT, கன்னியாகுமரியில் முதல் TIDEL NEO ஆகியவை நமது முதலமைச்சர் உறுதி செய்த சில முதல் முயற்சிகளாகும்.

**தவறான அறிக்கை வெளியிடும் எடப்பாடி பழனிசாமி!**

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தொடர்ந்து தவறான அறிக்கைகளை வெளியிட்டு அரசியலில் கவனம் பெற நினைக்கலாம். ஆனால் தமிழ்நாடு முதலமைச்சரின் கீழ், தமிழ்நாடு தொடர்ந்து வளர்ச்சி பெற்று, இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் முதலிடத்தில் இருக்கும். அமைச்சர் பி.டி. ஆர்.பழனிவேல்தியாகராஜன் அளித்த நேர்காணலின் தரவுகளைக் கூட சரியாகப் புரிந்து கொள்ளாமல் அறிக்கை வெளியிட்டிருக்கிறீர்கள்.

பத்தாண்டுகால அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் நடந்த முதலீட்டாளர் மாநாடுகள் உள்ளிட்ட கோமாளிக் கூத்துகளால், உலகத்தில் எந்த நாடும் தமிழ்நாட்டுக்கு வரத் தயங்கியதையும், கடந்த நான்காண்டுகால திராவிட மாடல் ஆட்சியின் முதலமைச்சர் மேற்கொண்ட தொழில் வளர்ச்சியாலும், அதற்காக உருவாக்கிய கட்டமைப்புகளாலும் உலகின் பல நாடுகளும் தமிழ்நாட்டில் நாங்கள் முதலீடு செய்கிறோம் என ஆர்வம் காட்டி வருவதையும் அறியாததுபோல அறிக்கை வெளியிட்டிருக்கிறீர்கள். அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாகவே அது பற்றி செய்தியாளரின் கேள்விக்கு விளக்கமளித்து பதிலடி கொடுத்திருப்பதால், தங்களின் அடுத்த அறிக்கையை தயாரிக்கும் நேரத்தில் அதனைக் காண வேண்டுகிறேன்.

விமர்சனங்களை வரவேற்று எதிர்கொள்கின்ற ஆற்றல் மிக்க முதலமைச்சராக நம் திராவிட நாயகன் அவர்கள் இருக்கிறார். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆக்கப்பூர்வ விமர்சனங்களை சரியான தரவுகளுடன் முன்வைக்கட்டும். மண்டபத்தில் யாரோ சொல்வதை நம்பி, அறிக்கையாக வெளியிட்டு அம்பலப்பட வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கரூர் மாநகராட்சி திருமாநிலையூர் பகுதியில் கட்டப்பட்டு வரும் கரூர் புதிய பேருந்து நிலைய கட்டுமானப் பணிகளை, கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி பார்வையிட்டு ஆய்வு செய்தார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல், அரவக்குறிச்சி எம்.எல்.ஏ., ஆர். இளங்கோ, மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், ஆணையர் சுதா மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அருகில் உள்ளனர்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா பங்கேற்று பேசினார். உடன் மாவட்ட செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ., மேயர் சத்யா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன் உள்ளிட்டோர் உள்ளனர்.